Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

19.5.2023

**ஊடக வெளியீடு**

Ir. பத்மநாதன் K.
தலைமை நிர்வாக அதிகாரி
PBAPP மற்றும் PBA ஹொல்டிங் பெர்ஹாட்

# விளக்கம் : சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலைக்கான "மாற்று ஆதாரமாக" மெங்குவாங் அணையை 300MLD மேம்படுத்த சிந்தித்து பாருங்கள்

- **பொதுவாகவே, PBAPP சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின் (WTP) 100% சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை ஆதரிக்க சுங்கை மூடாவிலிருந்து பிரத்தியேகமாக மூல நீரைப் பெற்றுக் கொள்கிறது.**

- **வறட்சி அல்லது அவசரகால சூழ்நிலையின் போது, சுங்கை டுவா WTP இல் மட்டுமே பயன்படுத்துவதற்காக,PBAPP விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையிலிருந்து (EMD) 300 MLD நீர் மட்டுமே எடுக்கக்கூடும்.**

- **சுங்கை டுவா WTP தவிர, விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையிலிருந்து (EMD) உள்ள மூல நீரை பினாங்கு மாநிலத்தின் பிற WTP அல்லது அணைகளுக்கு விநியோகம் செய்ய முடியாது.**

பினாங்கு, வெள்ளி, 19.5.2023: விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD) என்பது சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையை (WTP) ஆதரிக்கும் ஒரு "வியூக வறட்சி இருப்பு அணை" என்பதை பினாங்கு நீர் விநியோக வாரியம் சென். பெர்ஹாட் (PBAPP) தெளிவுபடுத்த விரும்புகிறது.

இது ஆயர் ஈத்தாம் அணை அல்லது தெலுக் பஹாங் அணை போன்ற "தினசரி பயன்பாட்டு அணை" அல்ல.

சுங்கை டுவா WTP இல் 100% சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை ஆதரிக்க சுங்கை மூடாவிலிருந்து எடுக்க போதுமான நீர் இருக்கும் போது PBAPP, EMD இலிருந்து மூல நீரை எடுக்காது.

மார்ச் 2023 இல், PBAPP சுங்கை மூடாவிலிருந்து சராசரியாக 1,254 MLD நீரை எடுத்தது. சுங்கை டுவா WTP இருந்து 1,028 MLD உற்பத்தி செய்கிறது. சுங்கை மூடாவிலிருந்து 1,254 MLD நீரை எடுக்க முடியாத போது மட்டுமே PBAPP, மெங்குவாங் அணையில் இருந்து நீரை எடுக்கும்.

எனவே, EMD என்பது சுங்கை மூடா நீர்மட்டம் குறைவாக இருக்கும் போது சுங்கை டுவா WTPக்கு "மாற்று" மூல நீர் ஆதாரமாக சேவை செய்யும். PBAPP, 14.5.2023 அன்று ஏற்பட்ட
அவசரகால சூழ்நிலையின் போதும் சுங்கை மூடா நதி நீர்மட்டம் குறையும் போது மெங்குவாங் அணையிலிருந்து சுங்கை டுவா WTP இல் பயன்படுத்த நீரை எடுக்கப்பட்டது. .

EMD-ஐ "மாற்று" மூல நீர் ஆதாரமாக பயன்படுத்துவதற்கு இரண்டு முக்கிய நேரடி கட்டுப்பாடுகள் உள்ளன:

1. இந்த அணையின் அதிகபட்ச நீர் விநியோகத் திறன் ஒரு நாளைக்கு 300 மில்லியன் லிட்டர் (MLD) ஆகும். சுங்கை டுவா WTP இல் 100% சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை ஆதரிக்க சுங்கை மூடாவிலிருந்து PBAPP தற்போது சராசரியாக 1,254 MLD நீரை சுங்கை மூடாவிலிருந்து எடுக்கிறது. எனினும், சுங்கை டுவா WTP இல் முழு சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியில் சுமார் 23.9% மட்டுமே EMD இன் உடையது.

2. இதில் இருந்து வரும் மூல நீரை சுங்கை டுவா WTPக்கு மட்டுமே அனுப்ப முடியும். இந்த மூல நீரை பினாங்கு மாநிலத்தில் உள்ள வேறு எந்த WTP அல்லது அணைக்கும் விநியோகிக்க முடியாது. எனவே, EMD வேறு எந்த WTP அல்லது அணைகளுக்கும் "மாற்று" மூல நீர் ஆதாரமாக செயல்பட முடியாது.

EMD அணை சுங்கை டுவா WTP இல் சுத்திகரிக்கப்படும் நீர் உற்பத்தியை பிரத்தியேகமாக ஆதரிக்க உருவாக்கப்பட்டது;. ஏனென்றால், செபராங் பிறை மற்றும் பினாங்குத் தீவின் தென்மேற்கு மாவட்டத்தில் தினமும் PBAPP வழங்கும் சுத்திகரிக்கப்பட்ட நீரில் 80%க்கும் அதிகமான நீரை சுங்கை டுவா WTP உற்பத்தி செய்கிறது.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

**சுங்கை டுவா WTP, மற்ற அணைகள் மற்றும் WTP-களின் சேவைப் பகுதிகள்**

சுங்கை டுவா WTP சேவைப் பகுதியானது, வட செபராங் பிறை (SPU), மத்திய செபராங் பிறை (SPT), தெற்கு செபராங் பிறை (SPS) மற்றும் பினாங்கு தீவின் தென்மேற்கு மாவட்டத்தில் சுமார் 561,791 குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களை உள்ளடக்கியது.

2022 ஆம் ஆண்டில் பினாங்கில் மொத்த நீர் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 676,857 ஆகும். சுங்கை டுவா WTP இன் சேவைப் பகுதியில் உள்ள 561,791 நீர் பயனீட்டாளர்களைத் தவிர, மற்ற 115,066 நீர் பயனீட்டாளர்களும் பின்வரும் 3 அணைகள் மற்றும் பிற 8 WTP-களால் "சேவை" வழங்கப்படுகிறது.

- ஆயர் ஈத்தாம் அணை (பினாங்குத் தீவு)
- புக்கிட் பஞ்சூர் அணை (செபராங் பிறை)
- தெலுக் பஹாங் அணை (பினாங்குத் தீவு)
- ஆயர் ஈத்தாம் WTP (பினாங்குத் தீவு)
- பத்து பிரிங்கி WTP (பினாங்குத் தீவு)
- புக்கிட் தோ அலாங் WTP (செபராங் பிறை)
- புக்கிட் பஞ்சூர் WTP (செபராங் பிறை)
- Guillemard WTP (பினாங்குத் தீவு)
- சுங்கை பினாங்கு WTP (பினாங்குத் தீவு)
- **Waterfalls** WTP (பினாங்குத் தீவு)
- கொடிமலை WTP (பினாங்குத் தீவு)
- சுங்கை பினாங்கு WTP(பினாங்குத் தீவு)

அனைத்து அணைகள் மற்றும் WTP-களையும் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள நீர் பயனீட்டாளர்களின் நீர் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிர்வகிக்கிறது. பினாங்கில் இயங்கும் ஒவ்வொரு அணையும் WTPயும் 100% நகர்ப்புற மற்றும் 99.8% கிராமப்புற நீர் விநியோகச் சேவையை நிலைநிறுத்துவதில் பங்கு வகிக்கின்றன.

இந்த 3 அணைகள் மற்றும் 8 நீர் சுத்திகரிப்பு ஆலைகள் இன்றி, பினாங்கில் உள்ள மொத்தம் 115,066 நீர் பயனீட்டாளர்களுக்கும் நீர் விநியோகம் வழங்க முடியாது.

**ஆயர் ஈத்தாம் பகுதியை அவசர நீர் நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்தல்**

.

அவசர சூழ்நிலையின் போது, உதாரணமாக ஆயர் ஈத்தாம் அணை வறண்டு போகும் வேளையில் சுங்கை டுவா WTP-இலிருந்து ஆயர் ஈத்தாம் அணையின் சேவைப் பகுதிக்கு அதிக நீரை பம்ப் செய்ய PBAPP இணக்கம் கொள்ளும்.

இருப்பினும், இது கவனமாக செயல்படுத்த வேண்டும். இதில் பின்விளைவுகள் ஏற்படக்கூடும்:

- சுங்கை டுவா WTP-இன் தற்போதைய சேவைப் பகுதிகளில் நீர் விநியோகத் தடை, குறிப்பாக பினாங்கு தீவின் தென்மேற்கு மாவட்டத்தில் உள்ள செபராங் பிறை மற்றும் பாயான் லெபாஸ் FTZ ஆகிய இடங்களும் இதில் அடங்கும்.
- பினாங்கு மாநிலம் முழுவதும் அதிகமான நீர் அழுத்தம் காரணமாக குழாய் வெடிப்புகள் அல்லது பம்ப் ஹவுஸ் செயல்பாடு இழப்பு நிகழக்கூடும்.
- ஆயர் ஈத்தாமில் உள்ள சில நீர் பயனீட்டாளர்கள், குறிப்பாக உயரமான நிலத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு, இன்னும் நீர் விநியோகம் பெறாமல் இருக்கலாம்.

<u>முடிவுரை</u>

1. EMD இன் அதிகபட்ச செயல்திறன் 86,400 மில்லியன் லிட்டர் (ML), ஆனால் நீரை இழுக்கும் திறனை 1,000 MLD ஆக அதிகரிக்க மத்திய அரசாங்கம் மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டத்தை (MDEP) முடிக்கும் வரை PBAPP 300 MLD மட்டுமே நீரைப் பெற முடியும்.

   .

   MDEP திட்டம் 2011 இல் தொடங்கிய போதிலும் 2023 ஆண்டு வரை இன்னும் முழுமைப்பெறவில்லை.

2. EMD இல் சேமிக்கப்பட்டுள்ள 86,400 ML-ஐ பினாங்கில் உள்ள வேறு எந்த WTP அல்லது அணைக்கும் "சுதந்திரமாக" இடமாற்றம் செய்ய முடியாது. இது தற்போது நடைமுறைக்குச் சாத்தியமில்லை.

3. 2023 ஆம் ஆண்டில் அதிக நீர் தேவையின் காரணமாக, பினாங்கில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளருக்கும் இம்மாநிலத்தில் உள்ள 4 அணைகளும் (EMD உட்பட) மற்றும் 9

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

நீர் சுத்திகரிப்பு ஆலைகள் (சுங்கை டுவா WTP உட்பட) சிறந்த முறையில் செயல்பட்டால் மட்டுமே நீர் வழங்கல் 24/7 என்ற அடிப்படையில் 100% நீடித்திருக்கும்.

4. சுங்கை டுவா WTP இன் சேவைப் பகுதியில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் 561,791 பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் பினாங்கில் ஏற்பட்ட 12 மாத வறட்சியில் பாதிக்கப்பட்டு "சமாளித்து" வாழக்கூடும்.

சுங்கை டுவா WTP 100% திறனில் இயக்குவதற்கு PBAPP சுங்கை மூடா மற்றும் EMD இலிருந்து போதுமான நீரை எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும், பினாங்கில் உள்ள மீதமுள்ள 115,066 நீர் பயனீட்டாளர்களுக்கும் ஆயர் ஈத்தாம் அணை, புக்கிட் பஞ்சூர் அணை, தெலுக் பஹாங் அணை மற்றும் பினாங்கில் உள்ள மற்ற அனைத்து சிறிய ஆறுகளும் வறண்டு போனால் அவர்களுக்கும் நீர் விநியோகத்தில் தடை ஏற்படும்.

5. செப்டம்பர் 2023 இல் மழை பெய்யும் வரை ஆயர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் குறைந்துவிட்ட இருப்புக்கள் வறண்டு போகாமல் இருப்பதை உறுதிசெய்ய PBAPP கடுமையாக உழைத்து வருகிறது.

இருப்பினும், பினாங்கில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளர்கள் நீர் பயன்பாட்டை உடனடியாகக் குறைத்து எங்களுக்கு ஆதரவு நல்க வேண்டும்

நீரைச் சேமிப்பதற்கு உள்நாட்டு பயனீட்டாளர்களுக்கு 3 எளிதான மற்றும் மிகவும் பயனுள்ள வழிகள்:

a. உங்கள் செடிகள் அல்லது தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு நீர்க்குழாய் பயன்படுத்த வேண்டாம். அதற்கு பதிலாக நீர்ப்பாசன கேனைப் பயன்படுத்தவும்.

b. உங்கள் கார் அல்லது மோட்டார் சைக்கிள்களை சுத்தம் செய்ய நீர்க்குழாய் பயன்படுத்த வேண்டாம். அதற்கு பதிலாக ஒரு வாளி, துணி மற்றும் sponge பயன்படுத்தவும்; மற்றும் உங்கள் வாகனத்தை மிகவும்

Clarification: Please think of the Mengkuang Dam as a 300MLD “back-up resource” for the Sungai Dua WTP

அவசியமான போது மட்டுமே சுத்தம் செய்யவும்.

c. குழாயில் நீரை வழிய விடாதீர்கள். உங்கள் கைகள், உணவு, பாத்திரங்கள், கட்லரிகள், உடைகள் மற்றும் பிற பொருட்களை துவைக்க வேண்டியிருக்கும் போது மட்டுமே குழாயை இயக்கவும். உடனே குழாயை மூடிவிட்டு, குழாயை சரியாக மூட உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்.

**மேலும் நீர் சேமிப்பு உதவிக்குறிப்புகளுக்கு,**
PBAPP. www.pba.com.my **இணையதளத்தைப் பார்க்கவும்:**

**நன்றி.**

---